# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.9(L.W.22)
## SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.Gopalan |
| Father Name | : | |
| Occupation | : | Rtd. DSP |
| Taluk | : | |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 01.00 p.m**

**முதல் விசாரணை–**

நான் திண்டுக்கல் கிராமிய ஊரக உட்கோட்டத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணி செய்து 31.10.2018 அன்று பணி ஓய்வு பெற்றேன். நான் 2006 ஆம் ஆண்டு வேலூர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளராக பணி செய்து வந்தேன். 21.03.2006 ஆம் தேதி பாகாயம் காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணி செய்தேன். அன்று இரவு 08.30 மணிக்கு வேலூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன் என்பவர் பாகாயம் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமாக கொடுத்த புகாரை பெற்று பாகாய காவல் நிலைய குற்ற எண். 266/2006 U/s.307,338,294(b), 353,506(ii) r/w 34 IPC and 4 (1) (aaa) of TN P Act, Section 25(i–B)(a) of Arms Act 1959 PSO Order No.150, 151 of Tamil Nadu Police Standing Order படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 2** ஆகும். அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த சமயம் காவல் துணை கண்காணிப்பாளர் காவல் நிலையத்தில் ஆஜர் செய்த நாட்டு துப்பாக்கி –1 SMBL வகையை சேர்ந்த சுமார் 3 அடி நீளம் BUD எனப்படும் மரத்தினால் ஆன பகுதியில் சுமார் 3.45 அடி நீளமுள்ள இரும்பு

பேரல், மருந்து நிரப்ப பயன்படுத்தப்படும் இரும்பு கம்பி சுமார் 3 அடி நீளம் உடையது, trigger நாட்டு வெடிமருந்து துகள்களுடன் உள்ளது, மரக்கட்டையில் 3 இடங்களில் பித்தளை பூண் போடப்பட்டிருந்தது. BUD 5 அங்குலம், பேரல் 1/2 அங்குலம், diameter அளவுடையது. இதை துணை காவல் கண்காணிப்பாளர் 21.03.2006 ஆம் தேதி 18.00 மணிக்கு சிவநாதபுரம் கையிலாய மலை திப்பையிடம் சாராயம் விற்று கொண்டிருந்த 4 எதிரிகளை போலீசார் பிடிக்க சென்றபோது எதிரி சடையன், வயது 20, த/பெ.ஜெயராமன், அல்லேரி கிராமம் என்பவர் RSI சீனிவாசன் என்பவரை நோக்கி சுட பயன்படுத்திய உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கி DSP, வேலூர் அவர்களால் பாகாயம் காவல் நிலையத்தில் 21.03.2006 இரவு 08.30 மணிக்கு ஆஜர் செய்யப்பட்டதை நான் படிவம் 91 ன் மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ. 3** ஆகும். அந்த துப்பாக்கி ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து காவல் துணை கண்காணிப்பாளர் ஆஜர் செய்த எதிரி மணி (எ) நடுபையன், த/பெ. பாப்பைய்யன், ஏரிக்கொல்லை, அல்லேரி என்பவரை சாராயம் விற்று கொண்டிருந்தபோது போலீசார் கைது செய்ய முயன்ற போது காவல் துணை கண்காணிப்பாளர் வேலூர் அவர்களை கொலை செய்ய சுட்டு விட முயன்ற போது துப்பாக்கி தோட்டா நிரப்பப்பட்டதை கைப்பற்றி RDO,வேலூர் அவர்கள் மூலம் தோட்டா சுடப்பட்டு அளிக்கப்பட்டதை ஆஜர் செய்த துப்பாக்கியை DSP, வேலூர் அவர்கள் எதிரி மணி (எ) நடுபையனிடமிருந்து 21.03.2006 ஆம் தேதி மாலை 6 மணிக்கு சிவநாதபுரம் கையிலாய மலை, திப்பையிடம் சாராயம் விற்று கொண்டிருந்தபோது போலீசார் கைது செய்ய சென்ற போது DSP, வேலூர் அவர்களை நோக்கி சுட முயன்ற போது தற்காப்பிற்கு எதிரியை காலில் சுட்டு மடக்கி கைப்பற்றிய தோட்டா நிரப்பப்பட்ட நாட்டு துப்பாக்கியை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். அந்த துப்பாக்கி ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது– அந்த படிவம் 91 **அ.சா.ஆ. 4** ஆகும்.

அன்றைய தினம் துணை காவல் கண்காணிப்பாளர் பாகாயம் காவல்

நிலையத்தில் ஆஜர் செய்த விரிஞ்சிபுரம் காவல் நிலைய Item No.1–Revolver 380, Roger(Smith and Wison) model. Vellore No.C20 என்று வெள்ளை பெயிண்ட்டில் எழுதப்பட்டது. Made in USA கைப்பிடியின் கீழ் ஒரு வளையம் உள்ளது. அதன் அருகில் V79164 என்ற நம்பர் பொறிக்கப்பட்டுள்ளது.

Item –2– Revolver ன் chamber லிருந்து எடுத்து ஆஜர் செய்த காலி தோட்டா குப்பி பித்தளையால் ஆனது. பின்புறம் firing அடையாளம் இருந்தது என்பதை 21.03.2006 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு சிவநாதபுரம் கையிலாய மலை, திப்பையிடம் சாராயம் விற்று கொண்டிருந்த எதிரி மணி (எ) நடுபையன், த/பெ. பாப்பைய்யன் என்பவர் நாட்டு துப்பாக்கியால் போலீசாரை சுட முயன்ற போது போலீசார் தற்காப்பிற்காக DSP,வேலூர் அவர்களால் எதிரியின் நடவடிக்கையை தடுக்க தற்காப்பிற்காக பயன்படுத்திய அரசு பொருள் Revolver –1 யை DSP,வேலூர் அவர்கள் 21.03.2006 அன்று இரவு 08.30 மணிக்கு பாகாயம் காவல் நிலையத்தில் ஆஜர்செய்தார். அதனை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ. 5** ஆகும். அந்த revolver ஏற்கனவே சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

DSP சரவணன் என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் எத்தனை பக்கம் இருந்தது என்றால் சுமார் 18 வருடம் ஆனதால் புகாரை பார்த்து தான் சொல்ல முடியும். அந்த புகாரில் முதல் பக்கத்தில் மேல் பகுதியில் பெயர் எதாவது குறிப்பிட்டு இருந்ததா என்றால் முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் ஒவ்வொரு பக்கத்திலும் அவர் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் இல்லை புகாரின் இறுதியில் கையெழுத்து போட்டுள்ளார். புகாரின் இரண்டாவது பக்கத்தில் சடையனின் அப்பா பெயர் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் ஜெயராமன் என்று எழுதப்பட்டுள்ளது. சாட்சி சொல்கிறார் அதை அழிக்கப்பட்டு அதன் மேல் ஜெயராமன் என்று எழுதி சுருக்கொப்பம் செய்துள்ளார். சின்னக்கண்ணன் என்ற பெயரை அழித்து விட்டு ஜெயராமன் என்று திருத்தம்

செய்யப்பட்டுள்ளது என்றால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் சின்னக்கண்ணன் என்ற பெயர் தான் திருத்தப்பட்டுள்ளதா என்று சொல்ல முடியாது. துப்பாக்கியை காவல் துணை கண்காணிப்பாளர் தான் என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சரிதான்.

காவல் துணை கண்காணிப்பாளர் என்னிடம் துப்பாக்கியை ஒப்படைக்கும்போது சாட்சி முன்னிலையில் கொடுத்தாரா என்றால் படிவம் 91 மூலம் கொடுத்ததால் சாட்சி தேவைப்படவில்லை. துப்பாக்கிகளை அவர் எங்கிருந்து எடுத்து வந்தார் என்றும் எந்த நேரம் எடுத்து வந்தார் என்றும் யாருடையது என்றும் அவர் அந்த படிவத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் அவர் சொல்ல சொல்ல என்னால் எழுதப்பட்டது.

அந்த துப்பாக்கி யாருடையது எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2 துப்பாக்கிகளும் ஒரே மாதிரியான துப்பாக்கி என்றால் சரியல்ல, ஒன்றில் பித்தளை பூண் இருந்தது, ஒன்றில் எதுவும் போடதது. இவ்வாறு படிவம் 91 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டை தவிர வேறு வேறுபாடு எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல 2 துப்பாக்கிகளையும் தனித்தனியே அளவிட்டு, 1 துப்பாக்கிற்கு அளவு குறிப்பிட்டுள்ளேன். 1 துப்பாக்கிற்கு அளவு சொல்லவில்லை. எந்த கம்பனி மாடல் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது நாட்டு துப்பாக்கி எனவே மாடல் இல்லை. அதை உருவாக்கியது யார் என்று அதில் குறிப்பிடவில்லை. அவ்வாறு குறிப்பிடாததால் யார் தயாரித்தது என்று தெரியாது என்றால் தெரிய வாயப்பில்லை.

அப்போது அதை யார் தயார் செய்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். அந்த துப்பாக்கிகளில் கட்டை பகுதி ஒரே மாதிரியான மரத்தால் ஆனதா என்றால் தெரியாது, புகாரில் குறிப்பிடவில்லை. நானும் அதை பரிசோதனை செய்யவில்லை என்றால் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை.

படிவம் 91 ல் சொல்லப்பட்டுள்ள இந்த வித்தாயசத்தை தவிர்த்து வேறு

வித்தியாசம் எதாவது சொல்லியுள்ளேனா என்றால் ஒரு துப்பாக்கியில் சுடப்பட்ட வாசம் இருந்ததாகவும் பித்தளை பூண் போட்டிருந்ததாகவும் சொல்லியுள்ளேன். படிவம் 91 ல் குறிப்பிடப்பட்டதை தவிர நான் வேறு வித்தியாசத்தை பார்த்தேனா என்றால் இல்லை.

சாரயம் விற்றதாக சொல்லப்படும் அல்லேரி பகுதி பாகாயம் காவல் நிலையத்திற்கு உட்பட்டதா என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சொன்னவற்றை அனைத்தும் என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் என்னை விசாரித்த போது கேட்ட விவரங்களை சொல்லியுள்ளேன்.

DSP சரவணன் என்பவர் ஆடு மேய்த்து கொண்டிருந்தவர்களை தவறாக மணி (எ) நடுபையனை நோக்கி தவறாக சுட்டுவிட்டதால் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்கு DSP சரவணன் அவர்கள் கேட்டு கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்தே ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை போய் பார்த்தேனா என்றால் இல்லை நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை. என்னிடம் வெடி மருந்து எதாவது ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. சாட்சி சொல்கிறார் RDO விடம் ஒப்படைத்து விட்டு அதன் பிறகு என்னிடம் ஒப்படைத்தார்கள். துப்பாக்கியை நான் எந்த ஆய்விற்கும் உட்படுத்தவில்லை.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் வழக்கு பதிவு செய்தது மட்டும் நான். வழக்கிற்காக நாங்களே தயார் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்தே தயார் செய்யப்பட்டது என்றாலும் 4 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார். என் வாக்குமூலம் பதிவு செய்தார்.

**விசாரணை முடிந்த நேரம்: 01.45 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.01.06 17:42:21 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்